**பேருவலை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேருவலை நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டுகளுக்குரிய முத்திரைக் கட்டண பற்றாக்குறையான சிட்டையிடல் ரூபா 7,233,655 ஆக இருந்த போதும் ரூபா 7,348,920 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக முத்திரைக் கட்டணம் மற்றும் ஒன்றிணைந்த நிதியத்தின் கணக்குகளின் மீதியில் ரூபா 115,265 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | மீளளிக்கப்படாத ரூபா 312,896 தொகையான ஆதனக் கடன் வட்டிக்காக மீளாய்வாண்டில் கடன்பட்டோர் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (iii) | பௌதீக திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலதன செலவினம் ரூபா 278,295 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iv) | இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்புக்கள் கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 5,039,404 தொகையான புத்தக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 66,135,867 தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 6,834,413 வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | நிலையான சொத்து கணக்குகளின் மீதிகளுக்கும் மூலதன வருமானம் மற்றும் நிதி உதவி மூலம் பங்களிக்கும் கணக்குகளின் மீதிகளுக்கும் இடையே ரூபா 271,702 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரு தொங்கல் கணக்கில் ரூபா 541,015 செலவு மீதியொன்று காணப்பட்டதுடன் அதனை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விரிவான பட்டோலைகள் இல்லாமையினால் ரூபா 72,383,152 தொகையான 07 கணக்கு விடயங்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2)(இ) | 396,000 | 13 சந்தர்ப்பங்களின் போது 05 உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட செயல்நிமித்த முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பணிகள் முடிவடைந்ததும் உடனடியாக முற்பணம் தீர்த்து வைக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) நிதிப் பிரமாணம் 571(1)(2) | 11,427,589 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதி 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 | 07 வாகனங்களின் மைலோ மீற்றர் இல்லாமையினால் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | மைலோ மீற்றரை பொருத்தி எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | மைலோ மீற்றர் இன்றிய வாகனங்களுக்காக மைலோ மீற்றரை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 6,740,072 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,233,072 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமானம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **சிட்டையிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (i) | வீதவரியும் வரியும் | 16,461,500 | 17,169,637 | 16,109,093 | 17,958,303 | 16,336,400 | 16,908,314 | 10,531,001 | 19,668,035 |
| (ii) | வாடகை | 21,847,100 | 18,125,671 | 18,455,085 | 5,909,262 | 19,870,600 | 11,149,153 | 8,971,404 | 2,177,749 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 693,100 | 404,000 | 883,137 | 153,950 | 510,000 | 216,755 | 216,755 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 13,454,100 | 10,000,000 | 3,264,095 | 10,000,000 | 210,000 | 125,875 | 125,875 | - |
| | | 52,455,800 | 45,699,308 | 38,711,410 | 34,021,515 | 36,927,000 | 28,400,097 | 19,845,035 | 21,845,784 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செலாற்றல்

### (அ) விருந்தினர் விடுதி வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்குரிய விருந்தினர் விடுதி வாடகை ரூபா 593,141 ஆக இருந்ததுடன், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 247,143 தொகை அதாவது 42 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை பணத்தை செலுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

### (ஆ) விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த மெய்மெய்யாய்வின் மூலம் கட்டணம் அறவிட வேண்டிய விளம்பர அறிவித்தல் பதாதைகள் இனங்காணப்படாமல் விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணமாக ரூபா 210,000 தொகை வருடாந்தம் சிட்டையிடப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் ரூபா 153,950 தொகை அதாவது 73 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2020 யூலை 17 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 144,250 ஆகவும், அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 10,000,000 ஆக இருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பட்டோலைகளை தயாரித்து வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**2.3 மிகைக் கட்டணம் செலுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்களுக்காக 2006 மே மாதம் முதல் 2015 ஆகஸ்ட் மாதம் வரை ஊழியர் சேமலாப பங்களிப்பு பணம் செலுத்தாமையின் காரணமாக ரூபா 211,800 தொகையான மொத்த நிலுவை பங்களிப்பு பணம் மற்றும் ரூபா 105,900 தொகையான மிகைக் கட்டணம் என்பவற்றை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட மிகைக் கட்டணம் மற்றும் ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 84,720 தொகையும் உள்ளடங்கலாக சபைக்கு ஏற்பட்ட ரூபா 190,620 தொகையான நட்டத்தை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை உரிய உத்தியோகத்தரிடம ிருந்து அறவிடப்பட வேண்டும். | சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **உப விதிகள்** | | |
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 05 விடயங்களுக்காக மாத்திரமே உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | உப விதிகளை விதிக்காத விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | 14 உப விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) **செயல்நடவடிக்கைத் திட்டம்** | | |
| வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டங்களில் செயற்பாடுகளை | செயற்பாடுகளை நிறைவேற்றும் | 2020 ஆம் ஆண்டின் போது |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றுதலின் செயல் முன்னேற்றத்தை அறவிடும் திட்ட முறைமையொன்று காணப்படவில்லை. | செயல் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | நிதிஎற்பாடு வழங்கப்படாமை<br>------------------------------------------------------- | | |
| | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 27 செயற்திட்டங்களுக்காக ரூபா 23.35 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பௌதீக திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 11.85 மில்லியன் தொகைக்காக வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீட்டின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம்<br>-------------------------------------------------- | | |
| | கழிவுப் பொருள் வரி விதித்தல், கூட்டுப் பசளை உற்பத்தி மற்றும் வணிக பெறுமதியுடன் கூடிய கழிவுப் பொருட்களை விற்பனை செய்தல் போன்ற திட்டங்களின் மூலம் வருமானத்தை உழைக்கக் கூடியதாக இருக்கும் போது அந்த சந்தர்ப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படாது கைவிடப்பட்டிருந்தது. மேலும், கழிவுப் பொருள் அகற்றும் இடங்களுக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்படாதிருந்ததுடன், அந்த இடங்களுக்கு அண்மித்த பகுதியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் குடியிருக்கின்றமை மற்றும் துர் நாற்றம் வீசுதல் மற்றும் ஈக்களின் பெருக்கம் போன்ற சுற்றாடல் பிரச்சினைகள் தோன்றியிருந்தன. | கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை முறைமைப்படுத்துவதற்காக திட்ட முறைமையொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். | நகர சபை அதிகார பிரதேசத்தில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக முறையான காணியொன்றை தெரிவு செய்தலில் பிரச்சினையொன்று காணப்படுகின்றமை மற்றும் தற்போது பயன்படுத்துகின்ற காணியில் கணிசமான பிரச்சினைகள் காண்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |
| (உ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>-------------------------------------------------- | | |
| | சபையினால் 05 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது நிலைபேறான நோக்கமான மகளிர் வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 30 பெண்களுக்காக தையல் பாடநெறியொன்று மற்றும் | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக உச்ச அளவிலான செயல் | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமை மற்றும் சில இலக்குகளை |

| | | |
|---|---|---|
| பௌதீக திட்ட வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் போன்ற பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றப்பட்டதாக வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கைகள் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட வேண்டும். | நடைமுறைக்கு கொண்டு வரும் போது பிரச்சினையான நிலைமை தோன்றியிருந்தது என்பதை அறியத்தருகின்றோம். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், செயலாளர் பதவியின் பதில் கடமைக்காக முகாமைத்துவ சேவையின் சிரேஷ்ட தரத்தின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நூலகர் பதவி, 03 வருமான பரிசோதகர் பதிவகள் மற்றும் வேலை 02 வேலை பரிசோதகர் பதவிகள் என்பன வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | நூலகர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வருமான பரிசோதகர் மற்றும் வேலை பரிசோதகர் பததவிகளுக்கு ஆட்சேர்த்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | 2012 ஆம் ஆண்டு முதல் முன்பள்ளி பாடசாலைகள் நடாத்திச் செல்லப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர் பதவிகள் உள்ளீர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினர் அங்கீகரிக்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதிவியணியில் உள்ளடக்குமாறு கோரப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (iv) | ஆரம்ப மட்டத்தின் பதவியணியினரில் 07 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | சகல ஆட்சேர்ப்புக்களும் 2019 நவம்பர் 21 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | | என்பதை அறியத்தருகின்றோம். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| அறவிட வேண்டிய ஊழியர் கடனில் 10 வருடங்களை விஞ்சிய ரூபா 91,428 தொகையான கடன் மீதி காணப்பட்டது. | நிலுவை கடன் மீதி அறிவடப்பட வேண்டும். | கணக்குகள் செயற்குழுவின் கட்டளையின் பிரகாரம் கடனை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான இறைச்சிக் கடை வாடகை ரூபா 880,700 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வாடகை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். | நிலுவை வாடகையை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பேருவலை நகர சபையின் செயலாளர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட மதுகம பிரதேச சபையின் செயலாளருக்கு 2019 மே 01 ஆம் திகதி முதல் 2019 செப்தெம்பர் மாதம் வரை கடமைகளை நிறைவேற்றும் படியாக ரூபா 204,495 தொகை செலுத்தப்பட்டிருந்தது. தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியொன்றில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தருக்கு செலுத்த வேண்டியது அவர் அந்த பதவியில் பதிற்கடமையில் நியமிக்கப்படுவாராயின் அவருக்கு கிடைக்கின்ற மேலதிக ஊதியத்தில் மூன்றில் இரண்டு பங்கு அளவு மாத்திரமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக ரூபா 153,930 தொகையொன்று மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்டுள் ள பணம் அறவிடப்பட வேண்டும். | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் அறவிடப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 3,294,940 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட மருதானை உடற்பயிற்சி நிலையம் மற்றும் அதில் உள்ள உடற்பயிற்சி உபகரணங்கள் இரண்டு வருடங்களுக்கு அண்மித்த காலமாக எந்தவித பயன்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | பிரதேசத்தின் மக்களின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | தேர்தல்களின் பின்னர் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.5.2 வாகன பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டு முதல் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட 07 வாகனங்கள் மற்றும் 05 டேலர்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விற்றுத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் வீதிகளில் முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட 128 பெயர் பதாதைகள் பொருத்தும் ஒப்பந்தம் 06 மாத காலத்தில் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், சபை கொள்வனவு செய்திருந்த ரூபா 760,000 பெறுமதியான 38 பெயர் பதாதைகள் 2020 யூலை மாதம் வரையிலும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக பெயர் பதாதைகளை பொருத்துதல் வேண்டும். | தற்போது 90 பெயர் பதாதைகள் பொருத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சியவைகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.7 தீர்வுகாணப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் 1.4.1(அ), (இ), (ஈ), (உ) பந்திகளுக்குரிய அவதானிப்புக்கள் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |